# இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள்

## ஆணையிடுபவர்: முனைவர்.ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப.,

ந.க.அ3/ 011375/2023 நாள்:18.10.2024

**பொருள்:** பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணித்தொகுதி - இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகு காலஞ்சென்ற அரசு ஊழியர் (லேட்).ஜி.பாண்டியன், அலுவலக உதவியாளர், என்பவரின் மகள் செல்வி.பா.சக்தி ஸ்ரீ என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

**படிக்க:**

1. இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/011375/2023/ நாள்:06.03.2024.
2. அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நாள்: 08.03.2023.
3. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் அலுவலக கடித எண்.ஆ.கு.3/4600/2024/ நாள்:20.02.2024.

*****

**ஆணை:-**

இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகில், வாலாஜா வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்து 24.07.2023 அன்று பணியிடையே காலமான (லேட்.) ஜி.பாண்டியன் என்பவரின் மகள் செல்வி.பா.சக்தி ஸ்ரீ என்பவருக்கு பார்வை 1-இல் காணும் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு தனியர் 06.03.2024 **முற்பகல்** இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

பார்வை -3-இல் காணும் கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டவர்களுக்கு பணிநியமன அலுவலரால் வழங்கப்பட்ட பணியினை பணிநியமன அலுவலரே பார்வை 2-இல் காணும் அரசாணையின் அடிப்படையில் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு தற்போது இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரியும் செல்வி.பா.சக்தி ஸ்ரீ என்பவருக்கு தனியர் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணியில் சேர்ந்த நாளான 06.03.2024 முற்பகல் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

ஒம்/-.ஜெயு.சந்திரகலா.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
இராணிப்பேட்டை.

/ஆணைப்படி/

18/10/24

அலுவலக மேலாளர் (பொது)

**பெறுநர்**

சம்மந்தப்பட்ட நபர்.

18/10/2024

**நகல்** : இவ்வலுவலக கணக்கு பிரிவு

**நகல்** : உதிரி-1.

இருப்பு கோப்பு -1